**அபிப்பிராயம்**

இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகத்தின் சேமலாப நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன்கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் நியாயமாக காண்பிக்கும் வகையில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளரின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாகபோதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் ஈடுபாட்டை தீர்மானிக்கப்படுகின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை திருத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

  இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 நிதிக்கூற்றுக்கள்

#### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்கள் முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு ''முறையாக திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக் கொள்வதற்காக அவசியமாகவுள்ளது.

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1981 இன் 74 ஆம் இலக்க இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழக சட்டம் | | | |

| | | | |
|---|---|---|---|
| (அ) 27 ஆம் பிரிவு | கட்டளைகளை தயாரிக்கும் அதிகாரம் பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபைகது கையளிக்கப்பட்டுள்ளதால் நிதியத்தின் பங்களிப்பு கணக்கின் மீதியில் 60 சதவீதம் வட்டியின்றி 10 ஆண்டுகளில் மீளச் செலுத்தும் அடிப்படையில் அல்லாமல் கடன் வழங்குவதற்காக கட்டளைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அக்கட்டளை காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 119 ஊழியர்களுக்கு கடனாக வழங்கியிருந்த ரூபா 74,244,555 கூட்டுத்தொகையான பணத்திற்காக எவ்வித வட்டியும் அறவிடப்படாமை காரணமாக நிதியத்தின் வளர்ச்சிக்கு அதனால் பாதகமான தாக்கமொன்று இடம் பெற்றிருந்தது. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கைக்கு அண்மித்தாக கட்டளையொன்று தயாரிக்கப்பட்டு நிர்வாக சபையின் அங்கீகாரத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிதியத்தை அதிகரித்துக் கொள்வதற்கு முடியுமான வகையில் தீர்மானம் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) 29(3) ஆம் பிரிவு | 2013 ஆம் ஆண்டில் சேவையை முடிவுறுத்திய உத்தியோகத்தரின் சேவையை முடிவுறுத்திய சந்தர்ப்பத்தில் காணப்பட்ட சேமலாப நிதியத்தின் கணக்கை முடிறுத்தி அதற்குரிய வட்டியுடன் நலன்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் குறித்துரைக்கப்பட்ட காலத்தில் அதனை நிறைவேற்றாமல் 2014 திசெம்பர் 31 வரை பங்களிப்பு வட்டியையும் அக்கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக உத்தியோகத்தரின் சேவை முடிவுறுத்திய திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்த ரூபா 2,359,617 ஆன தொகை ரூபா 2,589,800 வரை அதாவது ரூபா 230,183 ஆல் அதிகரித்திருந்தது. | குறித்த உத்தியோகத்தர் 2013.03.20 இல் உள்ளவாறு ஓய்வுபெறுவதற்கு தீர்மானம் கிடைக்கம் வரை அவரின் பங்களிப்புத் தொகை மற்றும் வட்டி என்பன 2014.12.31 ஆந் திகதி வரை ரூபா 2,589,800 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. | சேவையை முடிவுறுத்திய சந்தர்ப்பத்தில் சட்டத்தின் பிரகாரம் பங்களிப்பு கணக்கை முடிவுறுத்தி நலன்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 15,260,579 ஆன மிகையொன்றாக இருந்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 17,081,641 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 1,821,062 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வீழ்ச்சிக்கு வருமான வரி ரூபா 2,484,280 கொடுப்பனவு பிரதான காரணமாக இருந்தது

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களில் போக்கு பகுப்பாய்வு

முன்னைய ஆண்டின் செலவினங்களுக்கு ஒப்பாக மீளாய்வாண்டின் செலவினம் 123 சதவீததினால் அதிகரித்திருந்ததுடன் நிர்வாக சபை உப குழுவிற்காக கட்டணங்கள் கொடுப்பனவு மற்றும் சட்டச் செலவினம் என மேலதிக செலவினத்தை மேற்கொள்வதற்கு நேர்ந்தமையால் கணக்காய்வுக் கட்டணங்கள் அதிகரித்தமை இச்செலவினம் அதிகரிப்பதற்கு காரணமாக இருந்தது.

### 2.3 வருமான நிர்வாகம்

#### நடைமுறை விகிதம்

மீளாய்வாண்டின் நடைமுறை விகிதம் 27 : 1 ஆக இருந்ததுடன், முன்னைய ஆண்டின் அவ்விகிதம் 11 : 1 ஆக இருந்தது. முன்னைய ஆண்டில் திறசேரி உண்டியல்களில் செய்யப்பட்டிருந்த தொகை மீளாய்வாண்டிலும் குறுங்கால நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தமை அதற்கான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 10.75 சதவீதமான வருடாந்த வட்டி வீதத்தின் வைப்புச் செய்யப் பட்டிருந்த ரூபா 22,886,831 தொகையான 05 நிலையான வைப்புக்கள் தொடர்பாக மீளாய்வாண்டில் தீர்வையாவதற்கு முன்னர் 13.15 வீதமான வட்டி வீதத்தில் வேறொரு வங்கியொன்றில் நிலையான வைப்புக்களின் கீழ் முதலீடு செய்ததன் காரணமாக ரூபா 166,363 வட்டி நிதியத்திற்கு இழக்கப்பட்டிருந்தது. | வங்கியால் இம் முதலீட்டு நலனை பல்கலைக்கழகத்திற்கு குறைந்தது ரூபா 100 மில்லியனான தொகையை நிலையான வைப்புக்களில் வைப்புச் செய்யும் போது மாத்திரம் இந்நலனை வழங்குவதன் பேரில் ஆகும். முதலீடு முதிர்வடைவதற்கு முன்னர் முடிவுறுத்தப்பட்டு புதிய வைப்பில் கூடிய வட்டி வீதம் ஒன்றின் கீழ் ஆரம்பிக்கப்பட்டதுடன் அதனால் நிதியத்திற்காக கிடைத்த திரட்டிய இலாபம் ரூபா 216,749 ஆக இருந்தது. | நிதியத்திற்கு கூடிய சாதகமான வகையில் மிகைப் பணத்தை முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | உத்தியோகத்தர் ஒருவரின் சேவை முடிவுறுத்தப்பட்ட திகதியில் காணப்பட்ட சேமலாப நிதியத்தின் மீதியிலிருந்து பல்கலைக்கழகத்திற்கு ஏற்பதற்கு நேர்ந்த நட்டமொன்று அல்லது சேதமொன்றின் அளவினை அறவிட்டதன் பின்னர் எஞ்சிய மீதி உத்தியோகத்தருக்கு கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2016 யூலை 24 ஆந் திகதியில் வேலையிலிருந்து கேட்டு விலகிய உத்தியோகத்தருக்கு பொருட்களை மீளக் கையளிக்காமை என்ற காணரத்தை காட்டி சேமலாப நிதியத்தின் மீதியில் 25 சதவீதம் நிறுத்தி வைக்கப்பட்டு செலுத்த வேண்டிய மீதியொன்றான மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | இது தொடர்பாக SC/ Appex/86/2009 ஆம் இலக்கத்தின் கீழ் வழக்கொன்று நடைபெற்று வருவதால் எதிர்வரும் நடவடிக்கைகள் வழக்கு தீர்ப்பின் பின்னர் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. உத்தியோகத்தர் ஒருவர் ஓய்வுபெறும் போது அல்லது விலகிச் செல்லும் போது நிதியத்திற்கு அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவிட்டு சேமலாப நிதியத்தை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிதியத்தை மேம்படுத்துவதற்கு முடியுமான வகையில் தீர்மானம் எடுக்கப்பட வேண்டும். |